## சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை–08
## ந.க.எண்.3884/அ4/2020 நாள்.10.03.2022

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி – நலத்திட்டங்கள் – சென்னை மாவட்டம் – அரசு / அரசு உதவிபெறும் / மாநகராட்சி பள்ளிகளில் 2019 - 2020 மற்றும் 2020-2021 ஆம் கல்வியாண்டுகளில் 11–ம் வகுப்புகளில் பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது – கல்வி மாவட்டம் வாரியாக விலையில்லா மிதிவண்டிகளுக்கான பழுதுபார்ப்பு மற்றும் ரிப்பேர் – முகாம் நடத்துதல் – திருத்திய விவரம் அனுப்புதல் – சார்பு.

பார்வை: 1 சென்னை–5, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநரின் கடித எண்.D3/2407/2020 . dated:08.03.2022.

-----

பார்வையில் காண் சென்னை–5, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி, சென்னை மாவட்டத்திலுள்ள அரசு / அரசு உதவிபெறும் / மாநகராட்சி பள்ளிகளில் 2019 - 2020 மற்றும் 2020-2021 ஆம் கல்வியாண்டுகளில் 11–ம் வகுப்புகளில் பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டில் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்ட விலையில்லா மிதிவண்டிகளில் பழுதுபார்ப்பு மற்றும் ரிப்பேர் ஏதும் செய்யவேண்டியிருப்பின் கீழ்க்கண்டவாறு முகாமில் பழுதுபார்ப்பு செய்துகொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு உதவிபெறும் / மாநகராட்சி மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | கல்வி மாவட்டம் | முகாம் நடைபெறும் பள்ளிகளின் பெயர் | முகாம் நடைபெறும் நாள் |
|---|---|---|---|
| 1 | கிழக்கு சென்னை கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளிகள். | சர். தியாகராய மேல்நிலைப்பள்ளி, வண்ணாரப்பேட்டை, சென்னை–21. | 14.03.2022 |
| 2 | தென் சென்னை கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளிகள். | செ.தெ.நாயகம் மேல்நிலைப் பள்ளி, திநகர், சென்னை–17. | |
| 3 | வட சென்னை கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளிகள். | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை– 49. | 15.03.2022 |
| 4 | மத்திய சென்னை கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளிகள். | புனித எப்பாஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மயிலாப்பூர், சென்னை– 04 | |
| 5 | மேற்கு சென்னை கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளிகள். | புனித பால்ஸ் மேல்நிலைப் பள்ளி, வேப்பேரி, சென்னை– 07. | 16.03.2022 |

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை.
10/3/2022

பெறுநர்

| | | |
|---|---|---|
| 1 | தலைமை ஆசிரியர்கள், அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகள், சென்னை மாவட்டம். | |
| 2 | தலைமை ஆசிரியர், சர். தியாகராய மேல்நிலைப் பள்ளி, வண்ணாரப்பேட்டை, சென்னை–21. | Avon மிதிவண்டிகள் நிறுவனத்திற்கு இடவசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். |
| 3 | தலைமை ஆசிரியர், செ.தெ.நாயகம் மேல்நிலைப் பள்ளி, திநகர், சென்னை–17. | |
| 4 | தலைமை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை–49. | |
| 5 | தலைமை ஆசிரியர், புனித எப்பாஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மயிலாப்பூர், சென்னை–4 | |
| 6 | தலைமை ஆசிரியர், புனித பால்ஸ் மேல்நிலைப் பள்ளி, வேப்பேரி, சென்னை–07. | |

நகல்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.(தொடர் நடவடிக்கைக்காக)
2. சென்னை–05, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. சென்னை–01, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. THIRU. RAMESH, AVON CYCLE LIMITED, NUNGAMBAKKAM, CHENNAI -34.